**13.07.2022**

**OS.No. 295/2021 PW : 1, திருமதி. வள்ளி**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

நான் சென்னை, குரோம்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். பெரிய தெரு, ஜமீன்ராயப்பேட்டை கதவு எண். 44ல் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமானதில் இருந்து இந்த முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன். நான் படிக்கவில்லை. என் கணவர் என்ன படித்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. முந்தய வழக்குகளான அ.வ.எண். 497/1996 மற்றும் அ.வ.எண். 432/1997 ஆகிய வழக்குகள் பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்று கேட்டால் அந்த வழக்குகள் பற்றி எனக்கு தெரியாது. திருவள்ளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து 1996 அல்லது 1997 அல்லது அதற்கு பின்னர் எனக்கு அழைப்பானை எதுவும் வரவில்லை. இவ்வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்னர் நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதையும் அனுப்பவில்லை. 1ம் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி என் உடன்பிறந்த அண்ணனான ஸ்ரீராம் என்பவரின் மகன் ஆவார். என் அண்ணன் காலமாகிவிட்டார். 1ம் பிரதிவாதி எங்கே குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவர் 1996 மற்றும் 1997ல் எங்கே இருந்தார் என்று எனக்கு தெரியாது. 1998ம் வருடம் என் தாயார் பூங்காவனம் அம்மாள் காலமானார். முதுகூர் என்ற கிராமத்தில் காலமானார். அங்கே தான் ஸ்ரீராம் குடியிருந்தார். அவர் குடியிருந்த வீட்டில் தான் என் தாயார் குடியிருந்து காலமானார். ஸ்ரீராமன்

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.15 10:53:20 +0530

இறந்தபின்னர் அவரது மனைவியான அல்லி என்பவர் அந்தவீட்டில் தான் குடியிருந்தார். என் தாயாரின் ஈமசடங்கை செய்யும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே சண்டை எதுவும் வரவில்லை. இறந்த என் தாயை 1ம் பிரதிவாதி என்னை பார்க்கவிடவில்லை என்றும் பின்பு ஊரில் பஞ்சாயத்து பேசி என்னை என் தாயாரை பார்க்கமட்டும் 1ம் பிரதிவாதி அனுமதித்தார் என்றால் சரியல்ல. கடந்த 30 வருடமாக எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை. அவர் குடியிருக்கும் வீட்டிற்கு நானும் 30 வருடமாக செல்லவில்லை. தற்போதும் நாங்கள் பேசிக்கொள்ள மாட்டோம். 25 வருடத்திற்கு முன்னர் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே சென்னையில் உள்ள ரெட்டியார் குரூப் சமாதானம் பேசியது என்று சொன்னால் சரியல்ல. அந்த சமாதான பேச்சு வார்த்தை 1996 மற்றும் 1997ல் நடந்து முடிந்தது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுக்கவில்லை. போலீஸார் என்னையோ, 1ம் பிரதிவாதியையோ விசாரிக்கவில்லை. என் தாயார் எனக்கு பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தாரா என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது. எனக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுக்கவில்லை. என் அப்பாவின் சொத்துக்கள் எனக்கு வேண்டும் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். என் தந்தையான ஏழுமலை நாயக்கர் எனக்கு சொத்துக்கள் எதையும் எழுதி கொடுக்கவில்லை. என் தாயார் 1ம்

S
GANAPATHISAMY
Digitally signed by
S
GANAPATHISAMY
Date: 2022.07.15
10:53:27 +0530

பிரதிவாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் தாயாரை என் வீட்டிற்கு அழைத்து செல்வதுபோல் ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று 14.12.1995ல் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்கனவே இருந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டு என் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொண்டேன் என்றால் சரியல்ல. ஆகவே தான் அதன்பின்னர் 1ம் பிரதிவாதி என் மீது அ.வ.எண். 497/1996 மற்றும் அ.வ.எண். 432/1997ல் ஆகிய வழக்குகளை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அவ்வழக்கில் சமாதானம் ஏற்பட்டது என்றும் நான் 1ம் பிரதிவாதியிடம் ரூ. 2,25,000/- பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகி சமாதானம் ஆனேன் என்று சொன்னால் சரியல்ல.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY Date: 2022.07.15 10:53:32 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.